தவறு செய்த

"போலீசார் மீது தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை"

சட்டசபையில் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஜூலை. 23- தவறு செய்த போலீசார் மீது தயவு தாட்சண்யமின்றி, அரசியல் குறுக்கீடு இல்லாமல் நடவடிக்கை எடுக்கப் படுவதாக, சட்டசபையில் முதல் - அமைச்சர் கருணாநிதி கூறினார்.

கவன ஈர்ப்பு தீர்மானம்

நாட்ராம்பள்ளி காவல் சரகத்தில் உள்ள பூசாரியூரில், கள்ளச்சாராய வேட்டை நடத்தும் போலீஸ்காரர்கள் போல நடித்து, கொள்ளையடிக்க வந்தவர்கள் ராணி என்ற ஒரு பெண்ணையும் கொலை செய்த சம்பவம் குறித்து சட்டசபையில் தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் வேலூர் ஞானசேகரன், இகம்யூனிஸ்டு உறுப்பினர் டிமணி ஆகியோர் சட்டசபையில் ஒரு சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொண்டு வந்தனர்.

கருணாநிதி பதில்

இதற்கு பதில் அளித்து முதல் - அமைச்சர் கருணாநிதி பேசியதாவது:-

நாட்ராம்பள்ளி காவல் நிலைய சரகத்தைச் சேர்ந்த பூசாரியூரில் நடைபெற்ற ஒரு வன்முறைச் சம்பவத்திற்கு, ஒரு கொலைக்கு நடவடிக்கை எடுப்பது பற்றி என்று சொல்லியிருந்தால் நான் அதன் தொடர்ச்சியாக மற்றவைகளையெல்லாம் சொல்லியிருப்பேன். நான் சொல்ல வேண்டியவைகள் அனைத்தையும் அவரே சொல்லி விட்ட காரணத்தால் நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லாமல் போய் விட்டது.

அவரைத் தொடர்ந்து நம் முடைய மார்க்சிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மணியும் இந்தச் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கருத்தைக் கூறி இருக்கிறார். இந்தச் செய்திகளுக்கு, செழுமிய கருத்துக்களுக்கு எதிரான கருத்துக்கள் எதையும் நான் சொல்வதாக இலலை. அவர்களுடைய கருத்துக்களோடு, என்னுடைய கருத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டிதான் நான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன்.

நாட்டுக்கு தெரியும்

ஒன்றை மறந்து விடக்கூடாது. இதுபோன்ற சம்பவங்கள் கடந்த காலத்தில் நடைபெற்ற போது எந்த நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை. இன்னும் சொல்ல வேண்டுமேயானால் நடைபெற்ற சம்பவங்களுக்கு யாரோ, எவரோ காரணம் என்று இல்லாமல், உரியவர்கள் பலரே காரணமாக இருந்திருக் கிறார்கள். அதுவும் இந்த அவைக்கும், இந்த நாட்டுக்கும் மிக நன்றாகத் தெரியும்.

அப்படியில்லாமல், கடந்த காலத்திலே, கடந்த இரண்டு மாதக் காலங்களிலே நடை பெற்ற சம்பவங்களில் அரசு எவ்வளவு வேகமாக, கண்டிப் பாக, தயவு தாட்சண்யம் பார்க் காமல் நடவடிக்கை எடுத்திருக் கிறது என்பதை உறுப்பினர் ஞானசேகரனும், உறுப்பினர் மணியும் உணர்வார்கள் என்றே நான் நம்புகிறேன்.

அரசியல் குறுக்கீடு இல்லை

நீதிமன்றத்தில் ஒரு கொலை நடைபெற்ற உடனே, காவல் துறையினருக்கு கட்டளையிடப் பட்டு, அன்று இரவே சிலர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் ஏறி வந்த கார் கைப்பற்றப் பட்டது. தொடர்ந்து பல பேர் கைது செய்யப்பட்டு இன்னும் ஒரிருவர் மிச்சம் என்ற அளவில் அத்தனை பேர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டு லாக்-அப் கொலைகள். ஒருவர் லாக்-அப்பிலே மரணம் அடைந்தார். இன்னொருவர் வழியில் போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்டார் என்ற இரண்டு செய்திகள் இந்த இரண்டு மாதக் காலத்தில் வந்த போது உடனடியாக அந்தப் போலீசாருக்கு தயவுதாட்சண்யம் காட்டாமல், எந்த அரசியல் குறுக் கீடும், தலையீடும் இல்லாமல் நிச்சயமாக வரவும் இல்லை. வந்திருந்தாலும் இந்த அரசு பொருள்படுத்தி இருக்காது. புறக்கணித்திருக்கும் அந்த அளவிலே உடனடியாக காவல் துறை அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டு அல்லது வேலையிலிருந்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு அவர் கள் கைது செய்யப்பட்டும் இருக் கிறார்கள்.

முந்திய ஆட்சியில்

காவல்துறை அதிகாரிகள் இந்த இரண்டு நிகழ்வுகள் குறித்து கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு காரணமாக இருந்தவர்கள், உதவிகரமாக இருந்தவர்கள் காவல்துறையினர் தான் என்பதை அவையிலுள்ள யாரும் மறந்துவிட முடியாது. நாட்டு மக்களும் நிச்சயமாக மறந்துவிட மாட்டார்கள்.

கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதன் மூலமும், குற்றங்களை அனுமதித்த காவல் துறையினர் மீது கடுமையாக நடவடிக்கை எடுப்பதன் மூலமும் இந்தச் செயல்களைச் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு இன்றைக்கு நடந்து வருகிறது.

ஓரிரு நாட்களில்

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில், நாட்ராம் பள்ளி, பூசாரியூர் நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில், ஒரு வீட் டிற்கு போலீஸ்காரர்களைப் போல் சென்று, சாராய வேட்டைக்கு வந்தவர்களைப் போலச் சென்று ராணி என்ற ஒரு பெண்ணைக் கொலை செய்யும் அளவுக்கு ஒரு கொடுமை நடைபெற்று இருக் கிறது. உடனடியாக அங்கு போலீசார் சென்று அந்தக் கொடுமையை நிகழ்த்தியவர் களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றும் ஓரிரு நாட் களில் கைது செய்யப்படுவார் கள். பிடிபடுவார்கள் என்ற செய்தி இன்று காலையிலே கூட எனக்கு வந்திருக்கிறது. அதற்கு மேல் செய்தியைச் சொன்னால் அவர்கள் தப்பி விடக்கூடும். ஆகவே, இங்கு சொல்ல விரும்ப வில்லை.

ஏற்ற நடவடிக்கை இந்நிகழ் விலும் எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இதுமாதிரி நிகழ்வுகள் வன்முறைச் சம்ப வங்கள், விரும்பத்தகாத நிகழ்ச் சிகள் நிச்சயமாக கட்டுப்படுத் தப்படும் என்ற உறுதியை உங்கள் அனைவருக்கும் நான் அளித்து, இந்த அவையில் அமைகிறேன்.

மேற்கண்டவாறு முதல்-அமைச்சர் கருணாநிதி கூறினார்.